கோரிக்கை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

77—

ஆரம்ப சுகாதார நிலையம்

***4225 திரு. துரை. மணிவேல்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, அரியலூர் ஊராட்சி ஒன்றியம், கருப்பிலாக் கட்டளை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) அரியலூர் தொகுதி, அரியலூர் ஊராட்சி ஒன்றியம், கருப்பிலாக் கட்டளை கிராமத்தில் உள்ள துணை ஆரம்ப சுகாதார நிலையம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. விதிகளுக்குட்பட்டு, மக்கள் தொகைக்கேற்ப புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.

திரு. துரை. மணிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செந்நெல் அடி தொடரும், பொன்னி நதி பாயும், மடை புனலும் புகழ் பாடும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

2014 பிப்ரவரி 18]

புரட்சித் தலைவி எங்கள் அம்மா, தெய்வத் திருமகன் தேவர் திருச்சிலைக்குப் பூட்டி வைத்த பொற்கவசம் மிளிரும் ஒளிபோல (மேசையைத் தட்டும் ஒலி) பூமி உள்ளவரை புகழ் மணக்கும் மீனாட்சித் தாயே எங்கள் அம்மா! எண்ணற்ற திருக்கோயில் குடமுழுக்கு பொற்கலசங்களில் ஊற்றுகின்ற புனித நீர்த் துளிகளெல்லாம் புகழ் பாடும் திருவரங்கத் தெய்வமே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தேவாரம், திருவாசகம் திருமறை நூலின் பக்கங்கள் நிறைவு செய்யப்பட்ட ஒன்று. தாயே, உங்கள் சாதனைப் பொன்னேட்டின் பக்கங்களில் இதுவும் ஒன்றாக இருக்கட்டும் தாயே!

முற்பகல் 11-30

அரியலூர் தொகுதி, அரியலூர் ஒன்றியம், கருப்பிலாக் கட்டளை ஊராட்சி, கள்ளக்குடி, வண்ணாரப்பேட்டை, ஏழேரி மக்கள்தொகை 5,000. அருந்தாள் ஊராட்சி, பாளையம் அர்ச்சனாபுரம் மக்கள்தொகை 3,000. ஆலந்துறையார் கட்டளை ஊராட்சி, பழனூர், வாழைக்குழி, கீழக்காங்கேயனூர், மேலக்காங்கேயனூர் மக்கள்தொகை 5,000. மேலும், 30 கிராமங்கள் அந்த ஊராட்சியைச் சுற்றியுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையம் உள்ள இடம் கீழப்பழுர் 20 கிலோ மீட்டர். சுண்டக்குடி 15 கிலோ மீட்டர்; பையூர் 13 கிலோ மீட்டர்; அரசினுடைய விதியின்படி 8 கிலோ மீட்டர் தூரத்திற்குமேல் இருந்தால் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கலாம். அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற ஏதுவாகவும், அவசர மருத்துவ உதவி பெறவேண்டுமென்பதாலும், கருப்பிலாக் கட்டளை ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர, மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச்சென்று, ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைத்துத்தர வேண்டி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்றால் சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகையும், மலைப் பகுதியில் 20,000 மக்கள் தொகையும், இரு சுகாதார நிலையங்களுக்கிடையே குறைந்தபட்சம் 8 கிலோ மீட்டர்

[2014 பிப்ரவரி 18

இடைவெளியும் இருக்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கையான அரியலூர் வட்டாரத்தில் உள்ள மொத்த மக்கள்தொகை 1,51,825. ஏற்கெனவே அங்கே 6 ஆரம்ப சுகாதார நிலையங்களும், ஒரு urban P.H.C.- ஒரு நகர ஆரம்ப சுகாதார நிலையமும் நல்லமுறையிலே செயல்பட்டு வருகின்றன. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கேற்ப, தூரத்தைக் கருத்தில்கொண்டு, துறையின்மூலம் உரிய ஆய்வுகள் மேற்கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.

திரு. துரை. மணிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் பகுதியைப் பொறுத்தவரை அது மிகவும் பின்தங்கிய பகுதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டுக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். இருந்தாலும், கருப்பிலாக் கட்டளை ஊராட்சியைச் சுற்றிலும், அதிக தொலைவில்தான் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அரசினுடைய விதிகளுக்குட்பட்டு, அந்த இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, கருப்பிலாக் கட்டளை ஊராட்சியிலே ஆரம்ப சுகாதார நிலையம் இந்த ஆண்டே செயல்படுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டு, நன்றி கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறையை மகத்தான சேவைத் துறையாக வழிநடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளில் புதிதாக 47 ஆரம்ப சுகாதார நிலையங்களும், இந்த

2014 பிப்ரவரி 18]

ஆண்டு, கடந்த கூட்டத் தொடரிலே, வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக, இதுவரை யாரும் செய்யாத அளவிற்கு 118 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களும் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மூன்று ஆண்டுகளில் இதுவரை மொத்தம் 165 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. உறுப்பினர்கள் திரு. மு.க.ஸ்டாலின், திரு. துரைமுருகன் ஆகியோர் குறித்த உரிமைக் குழு அறிக்கைமீதான முடிவு பற்றிப் பேச முற்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். (குறுக்கீடு) திரு. சக்கரபாணி, என்ன என்று சொல்லுங்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஓர் உரிமை மீறல் சம்பந்தமாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது அவையின் தீர்மானம். அதைப் பற்றியெல்லாம் பேச முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவையினுடைய தீர்மானம் அதைப் பற்றி பேசுவதற்கில்லை. (குறுக்கீடுகள்) அவையினுடைய முடிவு அது. (குறுக்கீடுகள்) அவையினுடைய முடிவு. அதைப் பற்றி தனிப்பட்ட முறையில் பேசுவதற்கில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, அவையினுடைய முடிவு அது. அதைப் பற்றி எதுவும்*